


திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, தண்டராம்பட்டு கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான எ.வ.வேலு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், மாவட்ட துணைச் செயலாளர் மு.பெ.கிரி, ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், து.சக்கரவர்த்தி, மெய்யூர் சந்திரன் உட்பட பலர் உள்ளனர்.

### தேசிய நெடுஞ்சாலைகளில்

# பாதுகாப்பு மேம்பாட்டு பணிகள் குறித்து ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தருமபுரி ஆ.மணி கேள்வி!



புதுடெல்லி,ஆக3-

தருமபுரி மாவட்டம் வழியாக செல்லும் தேசிய நெடுஞ்சாலைகளின் பராமரிப்பு, சாலைப் பாதுகாப்பு மற்றும் புதிய உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து, தருமபுரி மக்களவைத் தொகுதி உறுப்பினர் ஆ.மணி மக்களவையில் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் ஜெய்ராம் கட்கரியிடம் கேள்வி எழுப்பினார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் தருமபுரி மாவட்டம் வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலைகளின் தற்போதைய நிலை, போக்குவரத்து அடர்த்தி மற்றும் சாலைப் பாதுகாப்புத் தரநிலைகள் குறித்து ஒன்றிய அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா?

அவ்வாறு ஆய்வு மேற்கொண்டிருந்தால், தேசிய நெடுஞ்சாலை வாரியாக அதன் விவரங்களை வெளியிடுமாறு கேட்டுள்ளார்.

மேலும், அடிக்கடி சாலை விபத்துகள் நடைபெறும் பகுதிகள், கடுமையான போக்குவரத்து நெரிசல் நிலவும் இடங்கள், சேதமடைந்த சாலைப் பகுதிகள், போதிய தெருவிளக்குகள் இல்லாத இடங்கள், பாதுகாப்பற்ற சந்திப்புகள், பழுதடைந்த பாலங்கள், பாதசாரிகள் மற்றும் சாலைப் பாதுகாப்பு வசதிகள் இல்லாத பகுதிகள் ஆகியவை அந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளனவா என்பதையும், அவற்றைச் சீரமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்தும் விளக்கம் அளிக்குமாறு கேட்டுள்ளார்.

அத்துடன், கடந்த மூன்று ஆண்டுகளில் தருமபுரி மாவட்ட தேசிய நெடுஞ்சாலைகளில் பராமரிப்பு, சாலை அகலப்படுத்துதல், வலுப்படுத்துதல் மற்றும் சாலைப் பாதுகாப்பு மேம்பாட்டுப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட, அனுமதிக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட நிதி விவரங்களை ஆண்டுவாரியாக வழங்குமாறும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், தருமபுரி மாவட்டத்தில் சாலைகளின் போக்குவரத்து திறனை அதிகரித்தல், பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் மாவட்டத்தின் இணைப்புத் திறனை வலுப்படுத்தும் நோக்கில் புதிய தேசிய நெடுஞ்சாலைத்திட்டங்கள் அல்லது மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா என்பதையும், அவ்வாறு இருந்தால் அவற்றின் விவரங்கள் மற்றும் செயல்படுத்தப்படும் கால அட்டவணையையும் வெளியிடுமாறு மக்களவையில் ஆ.மணி கேட்டுள்ளார்.

### தஞ்சையில் இன்று உதயநிதி ஸ்டாலின் தலைமையில் ஆர்ப்பாட்டம்!

# போக்குவரத்து தொ.மு.ச. தோழர்கள் பெருமளவில் பங்கேற்போம்!

## பொதுச்செயலாளர் சு.பாண்டியன் அழைப்பு!

திருவாரூர், ஆக 3-

தமிழ்நாட்டின் விவசாயத்தை கேள்விக்குறியாக்கி, லட்சோப லட்ச மக்களை கண்ணீரில் தள்ளும் தவெக எனும் ஆளுமையற்ற அரசைக் கண்டித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி தஞ்சையில் இன்று (03.08.2026) எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்திற்கு போக்குவரத்து தொ.மு.ச.வினர் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என பொதுச் செயலாளர் சு.பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

“மாடுகட்டி போரடித்தால் மாளாது என்று சொல்லி யானை கட்டி போராடித்த, நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடிய சோருடைத்த சோழ வளநாடு , நம் நாட்டு நெற்களஞ்சியம், நாம் வாழும் சோழ வளநாடு. வலம் கொழித்து எழில் கொஞ்ச நீர் தந்தாள் காவிரித்தாய்.

ஆளுமையற்றவர்களின் ஆட்சியில் ஆடிப்பதினெட்டுக்கு கூட நீரின்றிப்போன அவலம். விவசாயிகளின் கண்களில் நீர்வழியும் துயரம். கழக ஆட்சியில் ஜூன்12 மேட்டூர் அணை திறக்கப்பட்டு, நெல் வளமும் மக்களவளமும் நிறைந்திருந்தது.

தஞ்சை உள்ளிட்ட டெல்டா பகுதி விவசாயிகள் வேதனை துடைக்க காவிரிப்பிரச்சனைக்கு தீர்வு காணும் முயற்சியின் முதல் படியாக , கழகத் தலைவர் திராவிடநாயகர்முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆர்ப்பாட்டம் அறிவித்து இருக்கிறார்கள்.

சட்டமன்ற சண்டமருதம் இளம்தலைவர் சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் தஞ்சை பனகல் கட்டிடம் எதிரில் இன்று (03.08.2026 திங்கள்) காலை 10.00 மணிக்கு காவிரியில் தண்ணீர் பெற்றுத்தர வாக்கில்லாத தவெக அரசை கண்டித்து நடைபெறும் கண்டன ஆர்ப்பட்டத்தில் போக்குவரத்து தொ.மு.ச. தோழர்கள் பெருமளவில் பங்கேற்கவேண்டும்.

விவசாயம் செழித்து விவசாயிகள் வறட்சியின்றி வறுமையின்றி வாழும் காலம்தான், போக்குவாரத்து கழகத்தின் பொருளாதாரத்தையும் உயர்த்தும் என்பதை உணர்ந்து பங்கேற்று , 03.08.2026. அன்று பணி பாதிப்பின்றி வார ஓய்வு DRல் உள்ளவர்கள் அவசியம் பங்கேற்று ஆர்ப்பாட்டம் வெற்றி பெற அணிதிரள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு போக்குவரத்து தொ.மு.ச. பொதுச் செயலாளர் சு.பாண்டியன் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### சோபா மாடல் ஆட்சியில்

# பத்திரிகையாளர்கள் கீழே அமர்ந்து செய்தி சேகரிக்கும் அவலம்!

கள்ளக்குறிச்சி.ஆக.3-

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி, கல்வராயன் மலை பகுதியில் நேற்று முன் தினம் ஜூலை 31.07.2026 வெள்ளிக் கிழமை அன்று கோடை விழா தொடங்கியது.

கடந்த காலங்களில் கோடை விழாவின் போது கள்ளக்குறிச்சியில் இருந்து செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் வாகன வசதிகள் ஏற்படுத்தப்பட்டு அனைத்து பத்திரிகையாளர்களும் கல்வராயன் மலை கோடை விழா அரங்கிற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள், இந்த முறை வாகன வசதி, குடிதண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏதும் பத்திரிகையாளர்களுக்கு செய்து தரப்படவில்லை, அதையும் பொருட்படுத்தாமல் செய்தியாளர்கள் தங்களது சொந்த செலவில் பயணம் செய்து கல்வராயன் மலைக்கு சென்று செய்தி சேகரிக்க விழா மேடைக்கு முன்னதாக வந்திருந்த போதும் அங்கு அவர்களுக்கான இருக்கைகள் வழங்கப்படவில்லை .

இதனால் செய்வதறியாது திகைத்த செய்தியாளர்கள் அனைவரும் தரையில் அமர்ந்து செய்தி சேகரிக்க தொடங்கினார்கள். இதனால் விழா மேடையில் சலசலப்பு ஏற்பட்டது. மேலும் இது தொடர்பாக மாவட்ட நிர்வாகம் முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பத்திரிகையாளர்கள் சார்பில் கோரிக்கையும் வைத்துள்ளனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தொடர்ந்து சோபா மாடல் ஆட்சியில் பத்திரிகையாளர்கள் அவமதிப்பு செய்யப்படுவது தொடர்கதை ஆகி வருகிறது.

### சிவகங்கை நகரில் கோயில்கள் அருகே மதுக்கடை!

# மாற்றக்கோரி பொதுமக்கள் கோரிக்கை!

சிவகங்கை .ஆக.3-

சிவகங்கை நகரில் வடக்கு ராஜவீதி உள்ளது. இந்த வடக்கு ராஜ வீதியில் திருப்பத்தூர் ,மதுரை ,மானாமதுரை, ராமேஸ்வரம் மற்றும் வெளியூர் பேருந்துகள் நகர பேருந்துகள் இந்த வழியாகத் தான் பஸ் நிலையத்தை சென்றடைகின்றது.இதன் காரணமாக வடக்கு ராஜ வீதி யில் மக்கள் கூட்டம் அதிகமாக காணப்படும். இந்த வடக்கு ராஜ வீதியில் கூட்டுறவு துறைக்கு சொந்தமான இடத்தில் பாருடன் கூடிய டாஸ்மாக்கடை உள்ளது.

இந்த டாஸ்மாக் கடை அருகில் 100 மீட்டரில் வழிவிடும் சிவமுருகன் கோயிலும், அருள்மிகு கௌரி விநாயகர் ஆலயமும் உள்ளது. இது தவிர தனியார் மருத்துவமனைகள் உள்ளது .இந்த இடத்தில் நவீன டாஸ்மாக் மதுபான கடையில் வாங்குபவர்கள் அங்கேயே மது அருந்துகின்றனர். அந்த இடத்திலேயே சிலர் மயங்கி விழுந்து விடுகிறார்கள். இதனால் பொது மக்கள் அவ்வழியே செல்வதற்கு மிகவும் பயப்படுகிறார்கள் மேலும் பேருந்து அவ்வழியே வருவதால் மது போதையில் தள்ளாடிச் சென்று பேருந்துகள் முன் விழுகிறார்கள்.

இதனால் வாகன விபத்துகள் அடிக்கடி ஏற்படுகிறது. பல்வேறு வகையில் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள டாஸ்மாக் கடையை அகற்றுமாறு அப்பகுதி மக்கள் மற்றும் வர்த்தகர்கள் பலமுறை அரசிற்கு கோரிக்கைமனு அனுப்பியுள்ளார்கள் .ஆனால் இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லை .முதல்வராக விஜய் பொறுப்பு ஏற்றதும் கோயில்கள் மருத்துவமனை அருகே மதுபான கடைகள் இருக்கக் கூடாது என்று உத்தர விட்டார். ஆனால் அந்த உத்தரவு சிவகங்கை வடக்கு ராஜ வீதியில் உள்ள டாஸ்மாக் கடை மாற்றம் செய்யப்படவில்லை . எனவே முதல்வர் உத்திர வினை அதிகாரிகள் உடனடியாக நிறைவேற்றிடும் வகையில் சிவகங்கை வடக்கு ராஜ வீதியில் உள்ள டாஸ்மாக் கடையை மாற்ற வேண்டும் என்று மாவட்ட ஆட்சியருக்கு கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

# வரும் காலத்தை வடிவமைத்திருக்கிறார்கள்!




தமிழ்த்தாய் வாழ்த்து தந்த
மனோன்மணீயம் சுந்தரனார் பெயருடைய
பல்கலைக்கழகத்திலேயே
“நீராரும் கடலுடுத்த...” பாடலுக்கு
மூன்றாவது இடம்!
அப்படியும் ஆளுநர் கையால்
பட்டங்களை வாங்க
மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!
இந்த ஆண்டு ஆகஸ்ட் 15,
விடுதலை நாள்விழா
கரப்பான் பூச்சிகளின்
வெற்றி விழாவும் கூட!

மல்லாக்க விழுந்தால்
திரும்ப முடியாமல்
கால்கள் நடுங்கும் கரப்பான் பூச்சிகள்,
மக்களாட்சிக்குப்
புதிய பாடம் கற்றுத் தந்துள்ளன.
மாறும் தலைமுறைகள்
சிந்தனைகளையும் மாற்றுகின்றன!
ஆனால் அநீதிக்கு எதிராக
அணி திரளும் பண்பில்
இடைவெளிகள் இருப்பதில்லை.

தேவை ஏற்பட்டால் தெருவுக்கு வரவும்,
அடக்குமுறைகளை அடக்கிக் காட்டவும்,
களத்தில் நின்றது மாணவர் கூட்டம்!
சமூக ஊடகங்களில் வாழ்க்கையைத்
தொலைக்கிறார்கள் என்ற
மூத்த தலைமுறையின்
முணுமுணுப்புகளுக்கு
முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது!
தொழில்நுட்பத்தின் கூட்டணியில்
தங்கள் வலிமையின் எண்ணிக்கையில்
விஸ்வரூபம் எடுத்திருக்கிறது!
பொழுதுபோக்கு ஊடகமாக
மாறிக்கொண்டிருந்த
சமூக ஊடகத்தை,
சமுதாய மாற்றத்திற்கான
உலகக் குரலாக
மாற்றிக் கொண்டிருக்கிறது!

எழுந்த குரலை
எதிர்கொள்ள முடியாமல்
அதிகாரச் செருக்கு மையங்களும்
அதிர்ந்து போயிருக்கின்றன!
இந்தப் போராட்டம்
தலைநகர் மாணவர்களின்
உணர்ச்சி வெளிப்பாடு மட்டுமல்ல;
உலகம் முழுவதும் ஏங்கும்
சமூக நீதி, நல்லாட்சி,
வெளிப்படைத்தன்மை,
சுற்றுச்சூழல், பொறுப்புணர்வு
ஆகியவற்றை
வற்புறுத்தும்
மக்களாட்சியின் மகத்துவமும் கூட!

“நீங்கள் உலகில் காண விரும்பும்
மாற்றமாக நீங்களே இருங்கள்”
என்றார் மகாத்மா காந்தி!
முயற்சி செய்திருக்கிறார்கள்
மாணவர்கள்!
அவர்கள் முயற்சி
நட்சத்திரங்களை இலக்காக்கி
நிற்கிற இடத்தையும்
கோட்டை விடுவதில்லை;

நட்சத்திரங்களையே வெற்றி கொள்வது!
‘எனக்கு
நூறு இளைஞர்களைக் கொடுங்கள்;
இந்தியாவையே மாற்றிக் காட்டுகிறேன்”
என்றார் விவேகானந்தர்.
கொடுங்கள் என்று கையேந்தாமல்,
அவர்களுக்கு அவர்களே
கை கொடுத்து
அதிகார மேலாதிக்கத்தை
மாற்றியிருக்கிறார்கள்!

“இளைஞர்களே சிந்தியுங்கள்;
யாருடைய சொல்லையும்
அப்படியே நம்பாதீர்கள்” என்ற
பெரியாரின் மொழியாய்க்
களத்தில் நின்றிருக்கிறார்கள்!

“படித்த இளைஞர்கள்
தனக்காக மட்டுமல்ல,
சமுதாயத்திற்காகவும் வாழ வேண்டும்”
என்றார் கலைஞர்!
வரும் தலைமுறைக்காகவும்
தலைநகரில்
வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள்!
போராட்டம் என்பதே
இலக்கு இல்லை;
மாற்றத்திற்கான வழிமுறை!
வெற்றி என்பது
எதிரியை வீழ்த்துவதில் இல்லை.
அனைவருக்குமான
தீர்வைக் கண்டடைவது!

மாறி வருகிறது
மாணவர்களின் சமூகப் பொறுப்பு!
மக்களின் குரலை மதிக்கும்
ஆட்சியும்,
பொறுப்புணர்வுள்ள
மக்களும்தாம்
மக்களாட்சியின் பண்புகளை
மாண்புறச் செய்யும் என்பதை
மீண்டும் போராட்டம்
நினைவுபடுத்தியிருக்கிறது!
அவர்கள், போராட்டத்தால்
எதிர்காலத்தை உருவாக்கவில்லை!
காலம் இயற்கை.
காலத்தை உருவாக்க
யாராலும் முடியாதுதானே!
அதனால் அவர்கள்,
போராடியதால்
வரும் காலத்தை
வடிவமைத்திருக்கிறார்கள்!



அன்புடன்
ம.ரா



தேனி தெற்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கம்பம் ராமகிருஷ்ணன் பிறந்தநாளை முன்னிட்டு மகாராஜன் எம்.எல்.ஏ. நேரில் சென்று வாழ்த்து கூறினார். உடன் மாநில பொதுக்குழு உறுப்பினர் தக்காளி ஹக்கீம் மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். மாவட்ட துணை செயலாளர் வேப்பம்பட்டி செந்தில், ஒன்றிய செயலாளர்கள் கம்பம் தங்கப்பாண்டி, ஆண்டிபட்டி ராஜாராம், நகரச் செயலாளர்கள் வீரபாண்டி, பால்பாண்டி, ராஜா, லோகன் துரை, அணைப்பட்டி முருகேசன், அண்ணாதுரை மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.